# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 12,143 — 1960 ජූනි 10 වැනි සිකුරාදා — 10.6.1960

12,143 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 141 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 142 | அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள்பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### கமத்தொழிற் பகுதி

#### சாதனுபாட கமத்தொழிற் பாடசாலைகள்—பயிற்சி வகுப்புகள் 1960/61

கீழ்வரும் கமத்தொழிற் சாதனுபாடசாலைகளில் 1960/61 ம் ஆண்டுக்குரிய பயிற்சி வகுப்புகள் 1960 ம் ஆண்டு செப்rெம்பர் மாதம் 15 ம் திகதி ஆரம்பமாகும். குறிக்கப்படும் பாடசாலைகளுக்கெதிரே காட்டப்படும் உத்தியோகத்தர் இவ்வாண்டு ஜூலை மாதம் 15 ம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பக்காரர் பின்வரும் தகுதிகளுடையோராயிருத்தல் வேண்டும் :—

(1) 1960 ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 15 ம் திகதியில் வயதில் 16 க்கும் 22 க்கும் இடையிலுள்ளோர்.

(2) சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் பெற்றுள்ளோர்.

(பாடசாலையிலிருப்பின் பொதுத்தராதரப் பத்திரம், கனிட்ட பாடசாலைத்தராதரப்பத்திரம் போன்ற தகுதியுடையோரது விண்ணப்பங்களும் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும். ஆகையால் அவர்களும் விரும்பினுல் விண்ணப்பித்துக்கொள்ளலாம்).

பிற விபரங்கட்கு விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எழுதிக் கொள்க.

| பாடசாலை | மாவட்டம் | பயிற்சி மொழி | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய உத்தியோகத்தர் |
|---|---|---|---|
| **ஆண்கள் பாடசாலை** | | | |
| 1. மாப்பாலான .. | மாத்தறை, அம்பாந்தோட்டை .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர் மாத்தறை |
| 2. லபுதுவா .. | காலி .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், காலி |
| 3. கொரணு .. | களுத்துறை .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், களுத்துறை |
| 4. அம்பேயப்புசா .. | கொழும்பு .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், கொழும்பு |
| 5. வாகொல்லை .. | கேகாலை, இரத்தினபுரி .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், கேகாலை |
| 6. பிபிலை .. | பதுளை .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், பண்டாரவளை |
| 7. பெல்வகெரா .. | கண்டி, மாத்தளை, நுரளை .. | சிங்களம் .. | கமத்தொழில் உற்பத்தி உத்தியோகத்தர், மாஎல்லுபுலம |
| 8. வாரியப்பொல .. | குருநாகல், புத்தளம், சிலாபம் .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், வாரியப்பொல |
| 9. மகாவிலுப்புலாம .. | அநுராதபுரம், பொல்லனறுவா .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், அநுராதபுரம் |
| 10. அநுராதபுரம் .. | அநுராதபுரம், பொல்லனறுவா .. | சிங்களம் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், அநுராதபுரம் |
| 11. கிளிநொச்சி .. | யாழ்ப்பாணம் .. | தமிழ் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் |
| 12. வவுனியா .. | வவுனியா, மன்னுர் .. | தமிழ் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், வவுனியா |
| 13. கரடியனுறு .. | மட்டக்களப்பு, திருகோணமலை .. | தமிழ் .. | மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், மட்டக்களப்பு |

| பாடசாலை | மாவட்டம் | பயிற்சி மொழி | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய உத்தியோகத்தர் |
|---|---|---|---|
| **பெண்கள் பாடசாலை** | | | |
| 1. லபுதுவா | .. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை .. | சிங்களம் | .. மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், காலி |
| 2. வல்பிற்று | .. கொழும்பு, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, குருநாகல், மாத்தளை, சிலாபம், புத்தளம் | சிங்களம் | .. மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், கொழும்பு |
| 3. பண்டாரவளை | .. பதுளை, நுவரெலியா .. .. | சிங்களம் | .. மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், பண்டாரவளை |
| 4. திருநெல்வேலி | .. யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு | தமிழ் | .. மாவட்டக் கமத்தொழில் நீட்டல் உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் |

பேராதனை,
1960 ம் ஆ மே மீ 23 ம் உ.

ஏ. வி. றிச்சட்ஸ்,
பதிற் கமத்தொழில் அதிபதி.

---

1/3/5 (ஜி) II ம் பாகம்.

## மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—பெப்ருவரி, 1958

1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ம், நவம்பர் மாதம் 14 ம், 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 6 ம், பெப்ருவரி மாதம் 20 ம், மார்ச்சு மாதம் 20 ம், மே மாதம் 29 ம், ஜூலை மாதம் 10 ம், செப்டம்பர் மாதம் 18 ம், நவம்பர் மாதம் 20 ம், டிசம்பர் மாதம் 18 ம், 1960 ம் வருடம் ஜனவரி மாதம் 1 ம், பெப்ருவரி மாதம் 5 ந், பெப்ருவரி மாதம் 26 ந், ஏப்ரில் மாதம் 29 ந், திகதிகளில் 11,564, 11,584, 11,659, 11,670, 11,705, 11,752, 11,805, 11,856, 11,959, 12,010, 12,027, 12,055, 12,068, 12,119 ம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்ட, 1958 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21 ம், நவம்பர் மாதம் 11 ம், 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம், பெப்ருவரி மாதம் 17 ம், மார்ச்சு மாதம் 17 ம், மே மாதம் 26 ம், ஜூலை மாதம் 6 ம், செப்டம்பர் மாதம் 14 ம், நவம்பர் மாதம் 13 ம், டிசம்பர் மாதம் 12 ம், டிசம்பர் மாதம் 28 ம், 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ம், பெப்ரவரி மாதம் 22 ம், ஏப்ரில் மாதம் 25 ந் திகதிகளிடப்பட்ட தனித்தனி விளம்பரங்களைத் தொடர்ந்து, 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் நடாத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் பொது எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| கனகசிங்கம், க. | .. மந்துவில், கொடிகாமம் |
| சில்வா, வி. சி. | .. காரியாதிகாரி அலுவலகம், நாத்தாண்டி |
| சுந்தரலிங்கம், வி. | .. வேத்தியற் இலங்கை விமானப்படை, கட்டுநாயக்க |
| சமனதாச, ஹே. கெ. | .. 156, உடுவெல ரேட், அம்பிட்டி, கண்டி |
| பவுலிஸ், பி. வி. | .. 13, முலனகொடவத்தை, மாஇட்டிபே, காலி |
| பெரேரா, இ. பெ. | .. 34, நீர்கொழும்பு தெரு, வத்தளை |
| லிலி, மி. தொ. ஹே. | .. ஸ்ரீ விஜயசொகொத்த வித்தியாலயம், வலான, பாணந்துறை |
| ஜயவிக்கிரம, ஹீ. பே. | .. கிராமச் சபை காரியாலயம், பாந்துரா கொடை |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பு ஏற்காது. ஆனால் இடங்கள் காலியாக வரும் பொழுது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்தமானவையாக இருக்கும். இவர்கள் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த நிபந்தனைகளுக்கும் உள்ளாவர்.

எச். ஈ. பீரிஸ்,
திறைசேரி பிரதி செயலாளர்.

பொது திறைசேரி, கொழும்பு,
1960 ம் ஆ ஜூன் மாதம் 1 ந் திகதி.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை இராச விமானப்படை

கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள இலங்கை இராச விமானப்படையின் விமானப்படையாணைத் தலைவர், கட்டுநாயக்காவில் இருக்கும் இலங்கை இராச விமானப்படை நிலையத்தில் இரண்டு மரவேலை யந்திரங்களுக்கான தூசி எடுக்கும் பொறிக்கூறைக் கீழே தரப்பட்டிருக்கும் விபரங்களின்படி கொடுத்து அதை அமைப்பதற்குரிய அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்களை 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி மு.ப. 9.30 மணிவரை ஏற்றுக்கொள்ளுவார்.

1. 400 வோல்ற், 3 பேஸ், 50 சைக்கிள் உதவலுக்கு ஏற்புடைத்தான மோட்டரைஸ்ற் எக்சோஸ்ற் விசிறிக் கூறை சயிக்கிளோன் தூசிச் சேகரிப்புப் பொறியுடன் ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. மோட்டாரைஸ்ற் விசிறிக் கூறுக்கும் சயிக்கிளோனுக்கும் வேண்டிய ஆதார உருக்குக் கட்டுக்களையும், குறித்தவிரு மரவேலை யந்திரங்களுக்கு ஏற்புடைத்தான சகல குழாய்கள், மூடிகள் உட்படவுள்ளனவற்றையும் ஆதாரவார்களையும் ஏற்படுத்திக் கொடுத்தல்.

3. இதற்கான இடத்தில் குறித்த இரு மரவேலை யந்திரங்களுக்கும் வேண்டிய தூசி எடுக்கும் கூறுவதற்கான மோட்டரைஸ்ற் விசிறி, சயிக்கிளோன் டக்ரிங், உருக்குக் கட்டு ஆகியவற்றை நிறுவுதல்.

4. கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள விமானப்படை ஆணைத் தலைவரிடம் இருந்து பெறற்பாலவாய பத்திரங்களில் ஒப்பந்தக் கேள்வி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒப்பந்தக் கேள்விப் பத்திரம் பிறப்பிக்கப்படுமுன் ஒப்பந்தக் கேள்வி வைப்புப்பணமாக ரூ. 50 கொழும்பு, பார்சன்ஸ் வீதியில் உள்ள சிவில் பரிபாலன உத்தியோகத்தரிடம் செலுத்தப்படவேண்டும்.

5. ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதைத் பார்ப்பதன் பொருட்டு ஒப்பந்தக் கேள்விக்காரர் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 24 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு விமானப்படைத் தலைமைக் காரியாலயத்தில் சமுகமாயிருக்கலாம்.

ஜே. எல். பார்க்கர்,
எயர் வைஸ் மார்ஷல்,
விமானப்படை ஆணைத்தலைவர்.

---

## அரசாங்க வேலைக் கேள்வி அறிக்கை

வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசன இஞ்சினியரால் பெரிய பண்டிவிரிச்சான்குளம் இடதுவானை, 150′ அகட்டுவதற்காகிய விண்ணப்பப் பத்திரங்கள். இவ்வருடம் ஜூன் மாதம் 21 ந் திகதி காலை 9.30 மணி வரையும் நீர்ப்பாசன இலாக்காவில் ரூபா 30,000 க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்படும்.

வி. எஸ். வேலுப்பிள்ளை,
எஸ். டீ. ஓ. மடுவேலை.

---

## வளிமண்டல ஆய்வுப் பகுதி

### ஜல வாயு தயாரிப்பதற்கு வேண்டிய அலுமினியச் சீவல்கள் விநியோகத்திற்கான விலை விபரம்

வளிமண்டல ஆய்வுப் பகுதிக்கு 40 அந்தர் அலுமினியச் சீவல் தேவைப்படுகிறது. இது கடைசல் சீவல்கள், வெட்டித் தள்ளிய சிறு துண்டுகள், மெல்லிய தகடுகள் ஆகியன கொண்டதாய் தகரக் கொல்லர் கத்தரிக் கோலால் வெட்டக்கூடியனவான மெல்லிய கீற்றுகளாக இருக்கவேண்டும். மெல்லிய தகடுகளாக விநியோகிப்பதனால் கடதாசியும் மற்றும் பிற பொருள்களும் நீக்கியே விநியோகிக்க வேண்டும்.

1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ந் தேதியளவில் இவ்விநியோகம் தேவைப்படுகிறது.

விநியோகம் செய்ய உத்தேசிப்போர் மாதிரிகளுடன் தங்கள் கேள்விப் பத்திரங்களை உறையிலிட்டு அரக்கு மெழுகு ஊற்றி முத்திரையிட்டு கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி பகல் 12 மணிக்கு முன்னர் சேரத்தக்கதாக அனுப்ப வேண்டும். தங்கள் கேள்விப் பத்திரங்களில் குறிப்பிடும் விலை ஒரு அந்த ருக்கானதும் சாக்குகளில் இக்கந்தோரில் சேர்ப்பிப்பதற்கானதுமான விலையாயிருத்தல் வேண்டும்.

டி. ஜே. ஜயசிங்க,
பதில் அதிபதி,
வளிமண்டல ஆய்வுப் பகுதி.

வளிமண்டல ஆய்வுப் பகுதி,
புல்லர்ஸ் வீதி,
கொழும்பு 7.

---

**அரசாங்க உல்லாசப்பிரயாணிகள் அலுவலகம்**
**கேள்விப்பத்திர அறிவித்தல்கள்**

கீழே கொடுக்கப்பட்டுள்ள மேலதிகமானதும் உபயோகிக்கப்படாததுமான நீர் விளையாட்டுச் சாதனங்களை வேண்டுதல் அகற்றுதற்கான கேள்விப் பத்திர அறிவித்தல்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 15 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவும் அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலக அதிபர் அவர்களால் வரவழைக்கப்படும்.

1. 4 ஐக்குவமோபைல் ஸ்கூட்டேஸ்
   8 பற்றறிஸ் 12 வோல்ற் மேற் கூறப்பட்ட ஸ்கூட்டேஸ்களுக்கு
2. 4 சோடி மெய்ஸ்ர ஷாவ்ற் வாட்டஸ்கிஸ்
   4 ஸ்கிங் ரோப்ஸ்
3. 4 சோடி டொல்பைன் வாட்டஸ்கிஸ்
   4 ஸ்கிங் ரோப்ஸ்
4. 2 ஐக்குவ பிளேன்ஸ்
   2 கோலின்ஸ் ரோப்ஸ்
5. 2 ரோஸ் 161 சலோ ட்ரேற் ப்ஒற்ஸ்
6. 1 பென்ரு அ்ஹ போட் மோட்டார் 5 h.p.

ஈற்றில் உள்ள இரண்டு பொருட்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்கள் எல்லாவற்றையும் கொழும்பு, கொம்மிஸ் ஏறியற் வீதியில் உள்ள உல்லாசப் பிரயாணிகள் அலுவலகத்தில் அதிபரின் காரியாலயத்தில் எந்த வேலை நாட்களிலாவது கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம். இரு ஸ்கூட்டேஸ் சிறிது பழுதடைந்து இருப்பதால் திருத்தம் தேவை. இழுவைப் படகு பென்ருமோட்டார் முதலியவற்றை இக்கடுவா வாடி வீட்டில் பார்வையிடலாம். இதற்காய கோரிக்கை விண்ணப்பங்கள் இரட்டைப் பிரதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இப்பத்திரத்தைப் பெறுதற்கு ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் கச்சேரியில் அல்லது திறைச்சேரியில் 100 ரூபா கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டை, அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தால் விண்ணப்பப் பத்திரம் வழங்கப்படும்.

விண்ணப்பப்பத்திரங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 8 ந் தேதி 12 மணியளவும் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1960 ம் ஆண்டு ஆடி மாதம் 15 ம் தேதி காலை 9.30 மணியளவில் அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகத்தில் திறந்து வைக்கப்படும். ஏனைய விபரங்களை அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலக அதிபருக்கு மனுப்பண்ணி அறியவும்.

டி. அனுவிகார,
அதிபர்,
உல்லாசப்பிரயாணிகள் அலுவலகம்

அரசாங்க உல்லாசப் பிரயாணிகள் அலுவலகம்,
கொழும்பு, 1.
1960 ம் ஆண்டு ஜூன் மீ 3 ந் வ.

---

**உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏல விற்பனை**

பிக்கான் பிடிகள், மண்வெட்டிப் பிடிகள், மோட்டார் உபகரணங்கள், பற்றறிகள், டயர்கள், டியூப்கள் ஆகிய உபயோகத்திற்கு உதவாத சாமான்களின் ஏலவிற்பனை நாரம்பிட்டி வேலையற்றோர் நிவாரண வேலைக் காரியாலயத்தில் 1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்தப்படும்.

நாரம்பிட்டி, வேலையற்றோர் நிவாரண வேலைக்காரியாலய மேற்பார்வை உத்தியோகத்தரின் அனுமதியுடன் வேலைநேரத்தில் மேற்கூறிய சாமான் களைப் பார்வையிடலாம்.

ஏலவிற்பனையின்போதே முழுத்தொகையும் செலுத்தப்படவேண்டும்.

சா. ப. குமாரசிங்க,
பதிற் தொழில் அதிபர்.

தொழிற் பகுதி,
கொழும்பு,
1960 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் தேதி.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.